16.02.2026



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.143/2020**

**வா.சா. 1–ஜானகி, க/பெ.லெட்சுமணன்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சுமாராக எழுத படிக்க தெரியும். இவ்வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. 1975 ம் ஆண்டு வீரப்பபிள்ளை என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். அந்த கிரையப்பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். 3 செண்ட் நிலத்தை தான் அந்த கிரையப்பத்திரத்தில் கிரையம் வாங்கினேன். அதன் சர்வே எண்.60/1 ஆகும். சர்வே எண்.60/1–க்கு சுமார் எத்தனை ஏக்கர் நிலங்கள் கட்டுப்பட்டது என்றால் 3 செண்ட் என்று மட்டும் தான் தெரியும். 2000 ம் ஆண்டுக்கு பிறகு தான் என் கணவர் வீட்டுக்கு சென்றேன். 1980 ம் ஆண்டு முதல் 2000 ம் ஆண்டு வரை பிரதிவாதி குடும்பம் தான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தான் குடியிருந்தோம். நான் என்னுடைய வழக்கில் குறிப்பிட்டுள்ள பெருமாள், சுப்பம்மாள் ஆகியோர்களை

பார்த்துள்ளேன், அவர்களுக்கு தான் சொத்தை குடியிருக்க சொல்லி கொடுத்தோம். பெருமாள், சுப்பம்மாயிடம் எந்த ஆண்டு குடியிருக்க சொல்லி கொடுத்தீர்கள் என்றால் ஞாபகமில்லை. 1975 ம் ஆண்டு நான் கிரையம் வாங்கும் போது தாவா சொத்து காலிமனையாக தான் இருந்ததா என்றால் காலிமனையாக தான் இருந்தது. 1975 ம் ஆண்டு அந்த மனையில் நான் வீடு கட்டிவிட்டேன். உள்ளூர் உள்ளாட்சி மன்றத்தில் அனுமதி பெற்று மனையில் வீடு கட்டினீர்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும். அவர் இறந்துவிட்டார். வா.சா.ஆ.1 கிரையாவணத்தில் சர்வே எண்.60/1 ல் கட்டுப்பட்ட 3 செண்ட் நிலம் நான் கிரையம் வாங்கியதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு, இல்லை என்கின்றார். வா.சா.ஆ.1 கிரையாவணத்தில் நான் கிரையம் பெற்ற சொத்துக்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தான் இவ்வழக்கில் வழக்குரை மற்றும் முதல் நிரூபண வாக்குமூலத்தை தயார் செய்ய நான் தான் வழக்கறிஞருக்கு அறிவுரை வழங்கினேன். வழக்குரை சொத்துவிவரத்தில் சர்வே எண்.60/1 க்கு கட்டுப்பட்ட ஏக்கர் 11.21 செண்ட் என குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் நான் கிரையம் பெற்ற

16.02.2026



வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.60/1க்கு 11 ஏக்கர் 21 செண்ட் கட்டுப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் பெற்ற சர்வே எண்.60/1க்கு 3 செண்ட் நிலம் போக மீதி நிலம் காலியாக சும்மா தான் உள்ளது, மீதி நிலமும் என்னிடம் தான் உள்ளது. அவ்வாறு மீதி நிலம் என்னிடம் தான் உள்ளது என நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். சர்வே எண்.60/1ல் நான் குடியிருப்பதற்காக வரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதி இளமாறன் பெயரில் எந்த ஆண்டு தாவா சொத்திற்காக பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் எனக்கு நினைவில்லை. நான் முசிறி கோட்டாட்சியரிடம் பட்டா மாற்றம் செய்து மனு கொடுத்த தேதி மாதம் ஆண்டு நினைவில்லை. இவ்வழக்கு பிரதிவாதி இளமாறன் மீது பட்டா மாறுதலுக்கு முன்பு இந்த சொத்து யார் பெயரில் இருந்தது என்றால் என் பெயரில் தான் பட்டா இருந்தது. இவ்வழக்கில் என் பெயரில் உள்ள பட்டாவை நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. முசிறி கோட்டாட்சியர் பிரதிவாதி இளமாறன் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யக்கோரி வழங்கிய உத்தரவை படித்து பார்த்துள்ளீர்களா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த முசிறி கோட்டாட்சியர் பட்டா ரத்து

16.02.2026



உத்தரவை எதிர்த்து பிரதிவாதி இளமாறன் மேல்முறையீடு விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு சுப்பம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் சரிதான். சுப்பம்மாள் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யக்கோரி முசிறி கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன். இம்மனு மீது முசிறி கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார். அவ்வாறு முசிறி கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவை வழக்கு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

/உண்மை நகல்/
ஒம்/–திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.